# எய்ட்ஸ் என்றால் என்ன?



Deutsche
AIDS-Hilfe e.V.

**எய்ட்ஸ் என்றால் என்ன?**

உடலின் நோய் எதிர்ப்புத் தன்மையைப் பாதிக்கும் நோயை எய்ட்ஸ் (AIDS) என்றழைப்பர். எய்ட்ஸ் நோய் தோன்ற முக்கிய காரணியாயிருப்பது HIV என்றழைக்கப்படும் வைரசு. இவ் வைரசு, நோய்கள் பீடிப்பதைத் தடுக்கும் உடலின் எதிர்ப்புத் தன்மையை நலிவாக்கும் / பலவீனப்படுத்தும்.

ஒருவரின் உடலில் இந் நே ாய்கிருமிகள் தொற்றியிருந்தும் வெளியே தெரியாது பலமாதங்கள் கழித்தும் , சமயங்களில்பல வருடங்கள் கழித்தும், நிமோனியா, சில அபூர்வமான புற்றுநோய் (கான்ஸர்) போன்றவற்றின் மூலம் உடலின் நோய் எதிர்ப்புத் தன்மை நலிவாகியிருப்பது வெளியே தெரியவரலாம். சில சமயங்களில் மத்திய நரம்புத்தொகுதியில் மாற்றங்களை எற்படுத்தக் கூடுமாயினும் இதனால் கடுமையான பாதிப்புக்கள் உண்டாவது அரிது.

AIDS நோய் எப்போதுமே HIVவைரசு தொற்றுவதால் மட்டும் எற்படுவதில்லை.

**முக்கியமாக கவனிக்க வேண்டியது:**

AIDS பீடிப்பால் தோன்றும் பெரும்பாலான நோய் அறிகுறிகள் மற்றைய பல நோய்கள் பீடிப்பதால் எற்படும் அறிகுறிகள் போன்றே உள்ளன . உ+ம் காய்ச்சல். எனவே ஒரு அனுபவமுள்ள வைத்தியரால் மட்டுமே மேற்படி நோய் அறிகுறிகள் AIDS ஐக் காரணியாகக் கொண்டுள்ளனவா இல்லையா என்பதை நிர்ணயிக்க முடியும்.

**எவற்றால் HIV பரவ மாட்டாது?**

HIV ஒரு பலவீனமான வைரசு. இவை வெளிப்பட்டாலே விரைவாக இறப்பதுடன் சாதாரணமாக, வீடு அல்லது வைத்தியசாலை போன்றவற்றைச்சுத்திகரிக்கப் பயன் படுத்தும் பொருட்களே இவற்றைப் பாதிப்பற்றதாக்கும். HIV சிறுநீர், மலம், உமிழ்நீர், வியர்வை, கண்ணீர் என்பவற்றில் காணப்பட்ட போதிலும், இவற்றில் காணப்படும் எண்ணிக்கை, இவை இன்னொரு உடலில் தொற்றிக் கொண்டு நோய் ஏற்படுத்தப் போதாது. மேற்கூறிய உடற்சுரப்புகளால் இன்னொருவருக்கு நோய் தொற்றியதாக இன்றுவரை தெரியவில்லை.

இதன்படி கைகளை குலுக்குவதோ, அ ணைப்பதோ, தடவுவதோ, முத்தமிடுவதோ, ஒருவரின் தும்மல் இருமல் படுவதோ, கோப்பைகள் , தம்ளர்கள், கண்ணாடித்தம்ளர்கள், முள்ளுக்கரண்டிகள், கத்திகள், கரண்டிகள் என்பன பொதுவாக பாவனை செய்யப்படுவதோ, கழிவுக் கூடங்கள், குடிநீர்த்தொட்டிகள், வெப்ப அ றைகள் (Sauna) என்பன பகிர்ந்து கொள்ளப்படுவதாலோ AIDS/HIV பீடித்திருப்பவர்களுடன் கூட்டாகத் தொழில் புரிவதாலோ, வாழ்வு நடத்துவதாலோ நோய் தொற்றிக் கொள்ளும் அபாயமில்லை.

**எவ்வாறு HIV பரவலடைகின்றது?**

HIV கொண்ட ஒருவரின் இரத்தம் அல்லது விந்துகள் இன்னொருவரின் குருதிச்சுற்றோட்டத்தில் புகுவதன மூலம் மட்டுமே HIV நோய்க்கிருமிகள் இன்னொருவரின் உடலில் தொற்றிக்கொள்ளும். மேற்கூறிய உடற்பகுதி, குருதி, விந்துகளில் மிகுந்த அளவில் HIV உள்ளது. இதனால்தான் தடுப்புறையற்ற (Kondome) உடலுறவே இனச் சேர்க்கையே நோய்பரவும் வழியாய் உள்ளது. ஒருவரின் பெருங்குடல் உட்சுவற்களே நோய் தோற்றும் பலவீனம் கொண்டவை. இக்காரணத்தினால் தடுப்புறையற்ற குதப்பகுதி உடலுறவுப் பழக்கத்தினால் HIV பரவும் வாய்ப்பு உருவாகின்றது. தடுப்புறையற்ற பொதுவான யோனிப்பகுதி உடலுறவின் வழியிலும் நோய் தொற்றும் அபாயம் உண்டு. மாதவிடாய் காலத்தின் போதும் மேற்கண்ட உடலுறவினால்நோய் தொற்றும் அபாயம் கூடும். ஊசி மூலம் நாடிக்குள் ஏற்றும் போதை வஸ்து பாவனையாளர், ஊசிகளை ஏனையோருடன் பகிர்ந்து கொள்வது மிகவும் அபாயமானது. கர்ப்பத்தின் போதும் பிரசவத்தின் போதும் HIV தாயிலிருந்து, பிள்ளைக்குத் தொற்றிக்கொள்ளலாம். ஒருவருக்கு இரத்தம் ஏற்றப்படுவதால் HIV தொற்றிக் கொள்ளும் அபாயம் ஜெர்மனியைப் பொறுத்த வரையில் இல்லைஎனலாம். 1985 இலிருந்து தானமளிக்கப்படும் இரத்தம் hiv வைரசு கொண்டதா என்று சோதனை செய்யப்படுகின்றது.

**சிகிச்சை முறை ஏதாவது உண்டா?**

இதுவரை எவ்விதமான சிகிச்சை முறையும் நோய் எதிர்ப்புத்தன்மையை இழந்தவரைக் குணமாக்கக் கண்டுபிடிக்கப்படவில்லை என்பதுடன் HIV தொற்றிக்கொள்வதற்குஎதிரான தடுப்பு மருந்துச் சிகிச்சையும் கிடையாது. இருப்பினும் இந்நோய்க்கான

சிகிச்சை முறையில் மருத்துவத்துறை முன்னேற்றம் அடைந்துள்ளது. AIDS இன் விளைவாக தோன்றும் பல நோய்களைக் கட்டுப்படுத்தவும் சிகிச்சையளிக்கவும் தற்போது வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

**எப்போது பாதுகாப்பு நல்லது/ அறிவுரைக்குரியது?**

HIV தொற்றுவதைத் தடுக்கவோ, AIDS நோயை குணமாக்கும் சிகிச்சையோ இல்லாத தற்சமயத்தில் பாதுகாப்பே நோய் தொற்றுவதைத் தடுக்க உள்ள ஒரே வழியாகும்.

தன்னின ச் சேர்க்கையில் (Homosexual) ஈடுபடுபவர், தன்னின எதிரினச் சேர்க்கையில் (Bisexual) ஈடுபடுபவர், ஊசி மூலம் நாடிக்குள் ஏற்றும் போதைவஸ்து பாவனையாளர் என்ற பிரிவுகளைச் சேர்ந்தோரே பெரும்பான்மையாய் HIV, தொற்றும் அபாயத்தில் உள்ளோர். இக் குழுவினர் நோய் தொற்றும் அபாயமுள்ள நிலைமைகளிலும் எதேச்சையாய்க் கவனமின்றி இருப்பதே இதற்குக் காரணமாகும்.

சக ஆ ண்களுடன் உடலுறவு கொள்ளும் பழக்கமுள்ள ஆண்கள் குதப் பகுதி உடலுறவின் போது தடுப்புறைகளைப் பாவித்தல் போன்ற பாதுகாப்பான நடைமுறைகளினால் மிகச் சிறப்பாக தம்மைப் பாதுகாத்தக்கொள்ளலாம். ஊசி மூலம் நாடிக்குள் ஏற்றம் போதைவஸ்துப் பாவனையாளர் ஒருவர் தனக்கெனத் தனியாக ஊசி உபகரணங்களை வைத்துக்கொள்வதுடன் இவற்றை ஏனையோருடன் பகிரந்து கொள்ளாதிருப்பதும் மிக அத்தியாவசியம்.
ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் மேற்கூறிய குழுக்களைச் சேராத HIV பீடுத்திருப்பவர் தொகை மிகவும் குறைவு. எதிர இனச்சேர்க்கை வழியில் (Heterosexual) உடலுறவு கொள்பவர்களுக்கான அபாயம் குறைவாயிரு ப்பினும் தடுப்புறையற்ற யோனி குதப்பகுதி உடலுறவுகளின் வழியிலும் நோய் தொற்றுவது சாத்தியமானதாகும்.
பொதுவாக மேற்படி பாதிப்புக்கு உள்ளாகும் அபாயமுள்ள குழுக்களைச் சார்ந்தவர்களுடனோ , விபச்சாரத்தில் ஈடுபவர்களுடனோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களுடன் வழக்கமான உடலுறவு ஏற்படும்போதோ, இவர்களுடன் , தன் அல்லது எதிர் இனச் சேர்க்கை வகையாய் இருந்தாலும் தடுப்புறை கொண்ட உடலுறவே HIV தொற்றுவதற்க்கு எதிரான பாதுகாப்பாகும்.

**'சோதனைகள்' என்றழைக்கப்படுபவை எவற்றைத் தெரிவிக்கின்றன?**

தற்போது உள்ள சோதனைகளின் இலக்கு உடலில் HIV வைரசுகள் உள்ளனவா என்று நிர்ணயிப்பதே. இச் சோதனைகள் வைர சுக்கள் தொற்றுவதால் உடலில் உரு வாகும் எதிரப்புடல்களின் இருப்பைக்கண்டு கொள்வ தேயன்றி வைரசுக்களின் இருப்பையல்ல. ஏனைய தொற்றுதல்களின் போது உருவாகும் எதிர்ப்புடல்களைப் போலன்றி HIV எதிர்ப்புல்களால் வைரசுக்களைத் தாக்கமிழக்கச் செய்ய முடியாது. சோதனைகளின் மூலம் உடலில் hiv எதிர்ப்புடல்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டால் சோதனை முடிவை Positive/ பொசிற்றிவ் சார்பானது என்றழைப்பர். எதிர்ப்புடல்கள் கண்டுபிடுக்கப்படாதவிடத்தில் சோதனை முடிவவை Negative/நெகடிவ் எதிரானது என்றழைப்பர். HIV உடலில் தொற்றியிருந்தாலும் சோதனைகளில் தெரியும் எதிர்ப்புடல்கள் உடலில் தோன்றப் பல மாதங்கள் சிலவேளைகளில் வரருடங்கள் கூட எடுக்கலாம். அ தனால் சோதனைகளின் முடிவு எதிரானது என்று சொல்லப்படினும் இம்முடிவு அர்த்தம் குறைந்தது எனலாம். ஏதுவேளையில் சோதனை முடிவு சார்பானது என்று சொல்லப்படுமிடத்தில் முடிவுகளை நிச்சயப்படுத்தவும், தவறுகளை அகற்றவும் மீண்டும் சோதனை என்றொரு சோதனையை நிச்சயமாச் செய்தல் வேண்டும்.

சோதனை முடிவு 'சார்பானது' என நிச்சயிக்கப்பட்ட ஒருவரு க்கு aids உள்ளது அல்லது பீடிக்கும் என்று அர்த்தமில்லை. HIV கொண்ட அனைவருக்குமே AIDS தொடர்பான நோய்கள் பீடிக்குமென்றில்லை.

முக்கியம்: HIV சோதனையொன்றை செய்துகொள்ள எடுக்கும் முடிவின் ஒரு பகுதியாக தகுந்த ஆ லோசனையிரு ப்பது மிக முக்கியம். இவ்வாறு ஒரு சோதனையைச் செய்து கொள்ள நீங்கள் முடிவுசெய்யும் பட்சத்தில் சோதனை முடிவுகள் தேர்ச்சி பெற்ற ஆ லோசனையின்றி உங்களுக்கு கொடுக்கப்பட மாட்டாது என்பதை உறுதிசெய்துகொள்ளுங்கள்.

உங்கள் பெயர், விலாசமின்றி உங்கள் சோதனையும் இரகசியமாயிருப்பது முக்கியம். நீங்கள் ஐரோப்பிய சமூகத்தைச் (EC) சேராத நாடொன்றின் பிரஜையாய் இரு

க்கும் பட்சத்தில் இது மிக மிக முக்கியம். ஒரு சார்பான சோதனை முடிவால் நீங்கள் நாடுகடத்தப்படலாம். உங்களுக்கருகில உள்ள AIDS-Hilfe நிலயத்தில் எங்கு நீங்கள் இரகசியமாக AIDS/HIV சோதனை செய்யலாம் என்பது பற்றிய விளக்கத்தை/ பெயர், முகவரியைப் பெற்றுக்கொள்ளலாம்.

சோதனை செய்யப்பட்டுவிட்டது, செய்யப்படவில்லை அல்லது சோதனைகளின் முடிவு ‘சார்பானது‘ , ‘எதிரானது‘ என்ற நிலைமைகளைச் சாராது ஆபத்தான சூழல்களில் பாதுகாப்பே ஆ லோசனைக்குரியது..

**சமூகத்தில் AIDS**

எல்லாவித கடுமையான பாரதுாரமான நோய்களுமே பயத்தினால் உருவாகின்றன. உடல் நலம் கெடுதல் மரணபயம் மரணம் என்பவையே இப்பயத்திற்குக் காரணம். எனினும் இவை தவிர்ந்த aids பற்றிய வேறு வகைப்பயங்களும் உண்டு. பொதுவாகச் சமூகத்தில் வெளியரங்கமாக விவாதத்துக்கு உள்ளாகாமலும் ஏனகரால் ஏற்றுக் கொள்ளப்படாமலும் ஆயினும் விரிவாகப்பரவியிருப்பதுமான பழக்க வழக்கங்களுடன் தொடர்பாகவே HIV பெரும்பாலும் பரவுகின்றது. இதற்கு உதாரணங்களாக ஆண்களுடனான உடலுறவு வழக்கமான நீண்ட காலத் தொடர்புகளுக்கு அப்பாற்பட்ட குறுகிய கால உடலுறவுத் தொடர்புகள் கள்ளக் காதல்கள் போதைவஸ்து பாவனை என்பவற்றை கூறலாம். இக்காரணியே சமூகமும் தனிப்பட்டவர்களும் கூட்டாக AIDS ஐ அணுக முட்டுக்கட்டையாய் உள்ளது.
உண்மை என்னவெனில் HIV தொற்றுதல் சாதாரண பொதுமக்கள் இடையே பயப்பட்ட அளவிற்குப் பரவவில்லை. பெரும்பாலும் தன்னினச்சேர்க்கைக்கார ஆண்களுக்கும், போதை வஸ்து பாவனையாளருக்குமே AIDS நோய் பீடித்துள்ளது. பல வருடங்களுக்கு முன்னர் நோய் தொற்றல், பாதுகாப்பு முறைகள் என்பன பற்றியும் நோய் பற்றியும் மிகக் குறைவாகக் கண்டுபிடிக்கப் பட்டிருந்த காலத்திலேயே பாதிக்கப் பட்டவர்களில் பெரும்பாலானோர் நோயால் பீடிக்கப்பட்டனர்.

முன்னெப்பொழுதையும் விட மக்களிடையே உள்ள அனைத்துப் பிரிவினிலும் நோய் தொற்றுவதை இயலுமான அளவிற்குக் குறைக்கத் தற்சமயம் மிக முக்கியமாகவுள்ளது கல்வியே. பணத்திற்காக மக்கள் பாலுறவு கொள்பவர்கள் என்பதும், மக்களிடையே தன்னினச் சேர்க்கை உண்டு என்பதும் மக்கள் போதைவஸ துக்கள் பாவனையாளர் என்பதும் வெளியரங்கமாக ஏற்படுவதிலேயே எவ்வித aids பற்றிய விளக்கத்தின் வெற்றியும் தங்கியுள்ளது. தகுந்த முறையில் ஏற்றக்கொள்ளப்பட்டவர்களுக்கே அறிவிப்பும் செய்யலாம். ஒதுக்கப்பட்டு விடுவோம் என்ற பயம் உள்ளவர்களையும் தண்டனை குறித்துப் பயம் கொண்டவர்களையும் hiv தொற்றியுள்ளதால் மற்றவர்கள் தம்மைப் புறக்கணிப்பர் என்று எண்ணுபவர்களையும் தொற்றுதல் பாதுகாப்பு என்ற வழிகளில் அறிவித்தல்கள் சென்றடையா.

எம்மிடையே HIV, AIDS நோய் கொண்டோர் உள்ளனர் என்பதை நாம் ஏற்க வேண்டும். சக மாணவர்களாக, தொழிலாளிகளாக, அயல்வீட்டுக்காரர்களாக, இனத்தவர்களாக, நண்பர்களாக இருக்கலாம் இவர்களுக்கும் கல்வி, வீடு, வேலை, மருத்துவ வசதிகள் முக்கியம். இவர்களுக்கு நெருங்கியவர்களிடம் இருந்து நம்பிக்கை என்பவற்றிகான உரிமை உண்டு. இவர்கள் ஒதுக்கப்படுவதையும் HIV பாதிப்பால் ஏற்படும் அவலங்களை தடுக்கவும் இவர்களுக்கு இவ்வுரிமைகளைக் கிடைக்கச் செய்தல் மிகவும் அவசியமானது. சிறுபானமையினர் பற்றிய தவறான கருத்துக்களை ஒழிப்பதிலும் தொற்றுதல் பற்றிய ஆதாரமற்ற பயங்களைக் குறைப்பதிலும் நாம் வெற்றி கொள்வோமானால் எமது சமூகம் aids இனால் பிளவு படுத்தப்பட மாட்டாது.

மேற்கு ஜெர்மனியின் பல நகரங்களிலும் மேற்கு பெர்லினிலும் AIDS-Hilfen நிறுவனங்கள் உண்டு. இவர்கள் தனிப்பட்ட முறையிலும் தொலைபேசியிலும் ஆலோசனைகளும் ஆதரவும் வழங்குவர்.

# எய்ட்ஸ் என்றால் என்ன?

Deutsche AIDS-Hilfe e.V., Dieffenbachstr. 33,
D-10967 Berlin
Deutsche Apotheker- und Ärztebank, Berlin
Konto 010 35 00 500 (BLZ 100 906 03)

© Deutsche AIDS-Hilfe e.V., Berlin, 1. Auflage 1994
Detlev Pusch Gestaltung

Tamil

Deutsche AIDS-Hilfe e.V.